செய்தி வெளியீடு எண்.759 நாள். **21 .11. 2007**

## தமிழகம் முழுவதும் ஏழை எளிய மக்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், இலவச எரிவாயு அடுப்புகள் வழங்கும் விழாக்கள்

## நவம்பர் 27 அன்று சென்னையில் முதலமைச்சர் கலைஞர் வழங்குகிறார்

திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கையிலும், அதனைத் தொடர்ந்து, 2006–2007 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையிலும் அறிவித்தபடி தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள், 15.9.2006 அன்று அண்ணா பிறந்த பொன்னாளில் காஞ்சிபுரம் மாவட்டம் படப்பை அருகில் கரசங்கால் கிராமத்தில் உள்ள தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரத்தில் முதற்கட்டமாக 30,000 இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார். 16.9.2006 அன்று அமைச்சர் பெருமக்கள் தமிழகம் முழுவதிலும் உள்ள அனைத்து சமத்துவபுரக் குடியிருப்புகளுக்கும், நீலகிரி மாவட்ட மக்களுக்கும், சென்னை மாநகரில் இரண்டு குடிசைமாற்று வாரியக் குடியிருப்புகளுக்கும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கினர்.

அதனைத் தொடர்ந்து, 25 இலட்சம் ஏழை எளிய குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகளை 15.2.2007 அன்று திருவள்ளூர் மாவட்டம் பம்மதுகுளம் கிராமத்தில் முதலமைச்சர் கலைஞர் தொடங்கி வைத்தார். அதே நாளன்று தமிழகம் முழுவதும் நடைபெற்ற விழாக்களில் அமைச்சர் பெருமக்கள் கலந்து கொண்டு ஏழை எளிய தாய்மார்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கினார்கள். தொடர்ந்து தமிழகம் முழுவதும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டு வருகின்றன. 18.11.2007 வரை 23 இலட்சத்து 79 ஆயிரத்து 721 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அளிக்கப்பட்டு 21 இலட்சத்து 32 ஆயிரத்து 956 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

மூன்றாவது கட்டமாக 750 கோடி ரூபாய்ச் செலவில் மேலும் 34 இலட்சத்து 25 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்வதற்காக தமிழக சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் மேற்கொண்ட முடிவுகளின்படி ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அவற்றை வரும் டிசம்பர் மாதம் முதல் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்குவதற்கான ஏற்பாடுகளும் நடைபெற்றுக் கொண்டுள்ளன.

அதேபோல, ஏழை எளிய தாய்மார்களுக்கு எரிவாயு இணைப்புடன் கூடிய இலவச எரிவாயு அடுப்புகள் வழங்கும் திட்டம் 14.1.2007 அன்று முதலமைச்சர் கலைஞர் அவர்களால் சென்னையில் ஆயிரம் விளக்கு பகுதியில் தொடங்கி வைக்கப்பட்டு, அதே நாளில் தமிழகம் முழுவதும் மாவட்டங்களில் நடைபெற்ற விழாக்களில் அமைச்சர் பெருமக்கள் கலந்து கொண்டு இலவச எரிவாயு அடுப்புகளை வழங்கினார்கள். 16.11.2007 வரை தமிழகம் முழுவதும் 3 இலட்சத்து ஆயிரத்து 560 எரிவாயு இணைப்புடன் கூடிய இலவச எரிவாயு அடுப்புகள் வழங்கப்பட்டுள்ளன. தொடர்ந்து 8 இலட்சம் எரிவாயு அடுப்புகள் வழங்கப்படுகின்றன.

இத்திட்டங்களின் தொடர்ச்சியாக, முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சென்னையில் நவம்பர் 27 அன்று இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளையும், எரிவாயு இணைப்புடன் கூடிய இலவச எரிவாயு அடுப்புகளையும் ஏழை எளிய தாய்மார்களுக்கு வழங்குகிறார்கள். அதே நாளில் தமிழகம் முழுவதும் மாவட்டங்களில் அமைச்சர் பெருமக்கள் கலந்து கொண்டு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளையும், எரிவாயு இணைப்புடன் கூடிய இலவச எரிவாயு அடுப்புகளையும் வழங்குவார்கள். அமைச்சர் பெருமக்கள் கலந்து கொள்ளும் மாவட்டங்களின் விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| திருவொற்றியூர்<br>(திருவள்ளூர் மாவட்டம்) | : | பேராசிரியர் க.அன்பழகன்<br>மாண்புமிகு நிதித் துறை அமைச்சர் |
| சிதம்பரம்<br>(கடலூர் மாவட்டம்) | : | ஆற்காடு திரு.என்.வீராசாமி<br>மாண்புமிகு மின்துறை அமைச்சர் |

| | | |
|---|---|---|
| வசவப்பபுரம்<br>(தூத்துக்குடி மாவட்டம்) | : | திரு.மு.க.ஸ்டாலின்<br>மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் |
| | | திருமதி கீதா ஜீவன்,<br>மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் |
| திருவையாறு<br>(தஞ்சாவூர் மாவட்டம்) | : | திரு. கோ.சி. மணி,<br>மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் |
| பெத்தநாயக்கன்பாளையம்<br>(சேலம் மாவட்டம்) | : | திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்,<br>மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் |
| பழையபாளையம்<br>(வேலூர் மாவட்டம்) | : | திரு.துரைமுருகன்<br>மாண்புமிகு பொதுப்பணி (ம) சட்டத்துறை அமைச்சர் |
| திருவெண்ணெய்நல்லூர்<br>(விழுப்புரம் மாவட்டம்) | : | திரு. க.பொன்முடி,<br>மாண்புமிகு உயர்கல்வி (ம) கனிமவளத் துறை அமைச்சர் |
| வளநாடு<br>(திருச்சி மாவட்டம்) | : | திரு. கே.என்.நேரு,<br>மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் |
| குளத்தூர்<br>(பெரம்பலூர் மாவட்டம்) | : | திரு. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்,<br>மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் |
| சின்னவேடம்பட்டி<br>(கோவை மாவட்டம்) | : | திரு.பொங்கலூர் பழனிச்சாமி,<br>மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் |
| மணலூர்<br>(திண்டுக்கல் மாவட்டம்) | : | திரு. இ.பெரியசாமி,<br>மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் |
| நுள்ளிவிளை<br>(கன்னியாகுமரி மாவட்டம்) | : | திரு சுரேஷ்ராஜன்,<br>மாண்புமிகு சுற்றுலா (ம) பத்திரப் பதிவுத் துறை அமைச்சர் |
| நெடுங்கூர்<br>(கரூர் மாவட்டம்) | : | திரு பரிதி இளம்வழுதி,<br>மாண்புமிகு செய்தி (ம) விளம்பரத் துறை அமைச்சர் |

| | | |
|---|---|---|
| வேட்டவலம்<br>(திருவண்ணாமலை மாவட்டம்) | : | திரு.எ.வ.வேலு,<br>மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் |
| கோரவள்ளி<br>(இராமநாதபுரம் மாவட்டம்) | : | திரு. சுப.தங்கவேலன்,<br>மாண்புமிகு குடிசைமாற்று வாரியத்துறை அமைச்சர் |
| முத்தாண்டிபுரம்<br>(விருதுநகர் மாவட்டம்) | : | திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன்,<br>மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் |
| பல்லாவரம்<br>(காஞ்சிபுரம் மாவட்டம்) | : | திரு.தா.மோ.அன்பரசன்,<br>மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் |
| மித்ரவாயல்<br>(சிவகங்கை மாவட்டம்) | : | திரு.கே.ஆர்.பெரியகருப்பன்,<br>மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் |
| ஊதியூர்<br>(ஈரோடு மாவட்டம்) | : | திரு.என்.கே.கே.பி.ராஜா,<br>மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் |
| காவேரிப்பட்டினம்<br>(கிருஷ்ணகிரி மாவட்டம்) | : | திரு. தங்கம் தென்னரசு,<br>மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் |
| ஆச்சாரஹள்ளி<br>(தர்மபுரி மாவட்டம்) | : | திரு. எஸ்.என்.எம்.உபயதுல்லா,<br>மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் |
| கீழவடுகரை<br>(தேனி மாவட்டம்) | : | திரு.டி.பி.எம்.மைதீன்கான்,<br>மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் |
| பொட்டவெளி<br>(அரியலூர் மாவட்டம்) | : | திரு. என்.செல்வராஜ்,<br>மாண்புமிகு வனத் துறை அமைச்சர் |
| புங்கனூர்<br>(நாகப்பட்டினம் மாவட்டம்) | : | திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்,<br>மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் |
| பிரானூர்<br>(திருநெல்வேலி மாவட்டம்) | : | திருமதி பூங்கோதை,<br>மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் |
| நெடுமதுரை<br>(மதுரை மாவட்டம்) | : | திருமதி ஆ. தமிழரசி,<br>மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் |

| | | |
|---|---|---|
| **அறந்தாங்கி** | | **திரு.கே.பி.பி.சாமி** |
| **(புதுக்கோட்டை மாவட்டம்)** | : | **மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்** |
| **கீழ்த்திருப்பாலக்குடி** | : | **திரு. உ.மதிவாணன்,** |
| **(திருவாரூர் மாவட்டம்)** | | **மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்** |
| **பரளியாறு பஞ்சாயத்து** | : | **திரு. கா.இராமச்சந்திரன்,** |
| **(நீலகிரி மாவட்டம்)** | | **மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்** |
| **ஓ.பட்டுடையான்பாளையம்** | : | **திரு.வி.பி.துரைசாமி,** |
| **(நாமக்கல் மாவட்டம்)** | | **மாண்புமிகு சட்டப்பேரவை துணைத் தலைவர்** |

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–**9.**